**செ. கு. எண்**: 235 **நாள்**:03-07-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.7.2012

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.T.நடராஜன் அவர்கள் 16.3.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், எடையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.விஜயகுமார் அவர்கள் 29.6.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு.M. பாண்டியராஜன் அவர்கள் 28.6.2012 அன்று சாலை விபத்து ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 30.6.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, சிறப்புப் புலனாய்வுக் குழுவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மு. ஆறுமுகம் அவர்கள் 30.6.2012 அன்று செஞ்சி – திண்டிவனம் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், தெப்பக்குளம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.E.பெருமாள் ராஜா அவர்கள் 1.7.2012 அன்று பணி முடிந்து, தனது வீட்டிற்கு செல்லும் வழியில் வாகன விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. விஜயகுமார் தலைமைக் காவலர்கள் திரு. நடராஜன், ஆறுமுகம், பெருமாள் ராஜா, மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. பாண்டியராஜன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பல்வேறு விபத்துக்களில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.V.விஜயகுமார், தலைமைக் காவலர்கள் திரு. C.T.நடராஜன், M. ஆறுமுகம், E. பெருமாள் ராஜா, மற்றும் முதல் நிலைக் காவலர் திரு.M. பாண்டியராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**